THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்





**நவம்பர் 2022 (மடல் – 22) செய்தி - 10**

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி. 4:19).

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| Children's Corner | 11 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயராலே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளின் பெரிதான கிருபையினாலே இந்த ஆண்டின் பத்து மாதங்களை நிறைவு செய்து 11-வது மாதத்தைக் காணச் செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த புதிய மாதத்தில் கூட ஆண்டவர் தருகின்ற நம்பிக்கையின் வாக்குத்தத்தம்:

> **"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி. 4:19).**
> **"But my God shall supply all your need according to his riches in glory by Christ Jesus" (Phil.4:19).**

கர்த்தர் நமக்கு குறைவுகள் அனைத்தையும், சரீர, ஆவிக்குரிய தேவைகள அனைத்தையும் நிறைவாக்குவார். கர்த்தர் கொடுக்கும்போது நம்முடைய குறைச்சலின்படி கொடுக்காமல், தம்முடைய ஐசுவரியத்தின்படி நமக்கு கொடுக்கிறார். அவருடைய ஐசுவரியத்துக்கு அளவே இல்லை.

## 1. தேவைகளை அற்புதமாக நிறைவேற்றுவார்

இயேசு கிறிஸ்துவின் முதலாம் அற்புதத்தில் கலிலேயாவில் உள்ள கானா ஊரிலே தம்முடைய முதலாவது அற்புதத்தை செய்து மகிமையை வெளிப்படுத்தினார் (யோவான் 2:11).

கானா ஊரிலே திருமணம் நடைபெற்றதோடு அங்கே தண்ணீரை திராட்சரசமாக மாற்றி அற்புதம் செய்தார். சீடர்கள் அவரிடத்திலே அதிகமாக விசுவாசம் வைத்தார்கள்.

நம்முடைய குறைவுகளை நீக்கி, நிறைவை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார். நம்முடைய தேவைகளையும் அற்புதமாய் நிறைவேற்றுவார். கவலையற்ற வாழ்வை மாற்றி பயனுள்ள வாழ்க்கையாக மாற்ற நமது ஆண்டவர் வல்லவராயிருக்கிறார்.

## 2. குறைவுகளை நிறைவாக்குவார்

2 ராஜா. 4:7-ஐ வாசிக்கும்பொழுது அவன் (எலிசா), "நீ போய் அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்து, மீண்டதை கொண்டு, நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான்.

ஒரு தீர்க்கதரிசியின் மனைவி தன் கணவனை இழந்து ஏழை விதவையாக காணப்படுகிறாள். கடன்சுமை அதிகரிக்கிறது. கடனை கொடுத்தவன் அவனது இரண்டு ஆண் பிள்ளைகளையும் தனது அடிமைகளாக்க வந்துவிட்டான்.

தன்னுடைய வேதனைகளை தீர்க்கதரிசியாகிய எலிசாவைப் பார்த்து கூறி தனக்கு உதவி செய்யும்படி கூறுகிறாள். தன் கடன்பிரச்சனை பற்றி சொல்லும்போது ஒரு பெரிய தொகையை உதவியாக கொடுக்கவில்லை. அந்த ஏழை விதவையினிடத்தில் ஒரு குடம் எண்ணெய் இருக்கிறது. எலிசா கர்த்தருடைய வல்லமையினாலே அதிகரிக்க செய்கிறார். அவருடைய வீட்டிலே வெறும் பாத்திரம் இருக்கும் வரையிலும் எண்ணெய் இருந்து கொண்டே இருந்தது.

கர்த்தர் நாம் கேட்பதற்கும், நினைப்பதற்கும் அதிகமாக கொடுக்கின்றவர். நம்மை ஆசீர்வதிப்பதற்கு போதுமான அளவு ஆசீர்வாதங்கள் உள்ளது. கர்த்தருடைய ஆசீர்வாதம் அவருடைய பிள்ளைகள் அனைவருக்கும் போதுமானதாய் இருக்கும்.

இந்த புதிய மாதத்திலும் நம்முடைய குறைவுகளை மாற்றி நம்மை நிறைவாய் ஆசீர்வதிப்பார். ஆண்டவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
***அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.*** C

**டிசம்பர் மாத தலைப்பு**

**சமாதான பிரபு**

**[Prince of Peace]**

## போராட்டமும் கொண்டாட்டமும்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திலே அன்போடு கூட வாழ்த்துகிறேன். ஆண்டவரின் மிகப் பெரிய தயவினாலும், கிருபையினாலும் நாம் இந்த ஆண்டின் பத்து மாதங்களைக் கடந்து, 11-வது மாதத்திற்குள்ளாய் பிரவேசித்துள்ளோம். அதற்காய் ஆண்டவருக்கு முழு மனதோடு குடும்பமாய் நன்றி செலுத்துவோம்.

பிரியமானவர்களே எஸ்தர் புஸ்தகத்தில் 'போராட்டமும் கொண்டாட்டமும்' என்ற தலைப்பில் அநேக காரியங்களை குறித்து விரிவாக தியானித்தோம். இம்மாதம், எவ்வாறு போராட்டம் கொண்டாட்டம் ஆனது என்று சிந்திக்கலாம்.

எஸ்தர் புஸ்தகத்தின் முதல் ஐந்து அதிகாரங்கள் யூதர்களின் போராட்ட நாட்கள். கலக்கமும், துக்கமும் கலந்த நாட்கள். மகிழ்ச்சியைத் தொலைத்து, பீதியில் உறைந்த நாட்கள். ஆனால் அடுத்த ஐந்து அதிகாரங்களோ, அவர்களின் கொண்டாட்டத்தை அறிவிக்கிறது. உங்களைக் குறித்து பிசாசுகளும், நம் எதிரிகளும் போடும் சதித் திட்டங்களையும் பார்த்து பயப்பட வேண்டாம். அவன் செய்ய நினைத்தது நிச்சயம் நடைபெறாது. ***"தேவன் செய்ய நினைத்ததோ ஒரு நாளும் தடைபடாது. தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்று அறிந்திருக்கிறேன்"*** (யோபு 42:2).

ஆம், யோபுவின் வாழ்வைப் பாருங்கள். தொடர்ந்து போராட்டம். செல்வ செழிப்பாய் வாழ்ந்தவனை அது நடுத்தெருவிற்கு கொண்டு வந்து விட்டது. தன் சொந்த மனைவியே தற்கொலை செய்து கொள்ளச் சொல்லி வெறுத்துப் பேசுகிறாள். வாழ்வு முடிந்ததோ என்று எண்ணும்போது வாழ்வு மலர ஆரம்பித்தது. அங்கு போராட்டம் கொண்டாட்டமானது.

ஆம் பிரியமானவர்களே, தேவ பிள்ளைகளின் வாழ்வில் போராட்டத்தின் முடிவு கொண்டாட்டமே.

இன்னும் இத்தலைப்பிற்கு ஏற்ற ஒரு கதாபாத்திரத்தை இணைத்து தியானிக்கலாம். ஆம் யோசேப்பு, சிறு வயதிலேயே தாயை இழந்தவன். தகப்பனின் அதிக பாசமோ சகோதரர்களின் பொறாமையை பெற்றுத் தந்தது. கர்த்தர் தந்த தரிசனமோ, சகோதரரின் எரிச்சலை அதிகப்படுத்தி விட்டது. அதனால் நாடு கடத்தப்பட்டான். அடிமையானான். பொய்க்குற்றம் சாட்டப்பட்டான். தண்டனையோ சிறை வாழ்வு. அந்த தனிமையான, வெறுப்பான போராட்டமான வாழ்க்கையில் கொண்டாட்டத்திற்கான துளிர் விட்டது. அவனது வாழில் அதன் பின்பு அனைத்தும் கொண்டாட்டமாக மாறியது. இவையணைத்தும் தேவத் திட்டம்.

***"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ?"*** ( எண்.23:19)

யோசேப்புக்கு சொப்பனங்களைத் தந்தது யார்? அந்த சொப்பனங்கள் எதைத் தெரியப்படுத்தினது? எதிர் காலத்தில் தேவன் அவனை ஆசீர்வதிக்கும் திட்டங்களை சொப்பனங்களாக் கண்டான். நம் தேவன் சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர்.

துக்க நாட்களுக்கு முடிவு உண்டு என்பதே நிஜம். புலம்பல் களிப்பாகும் என்பதே உண்மை. ஆம் பிரியமானவர்களே, யோசேப்பின் போராட்டத்தின் முடிவு கொண்டாட்டமானது.

போராட்டத்தின் ஆரம்பம் வேதனையாக இருக்கலாம். போராட்டத்தின் நாட்கள் கண்ணீர் நாட்கள் தான். தனிமையின் நாட்கள் அவமானத்தின் நாட்கள் தான். ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள். இவை அனைத்தும் ஆசீர்வாதத்திற்கான காத்திருப்பின் நாட்கள். இதன் முடிவு கொண்டாட்டமே.

சங்கீதம் 126:5,6-ன் படி, ***"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்".***

கண்ணீரோடே விதைக்கலாம். ஆனால் அறுவடை கெம்பீரமாம். எஸ்தரின் புஸ்தகம் இதைத் தான் கற்றுத் தருகிறது. மொர்தெகாய் அடிமைதான். அரன்மணை வாசலில் அமர்ந்திருவன் தான். ஆமானின் அச்சுறுத்தல் போராட்டக்களம் தான். மொர்தேகாயுக்கு கர்த்தர் பேரில் இருந்த நம்பிக்கை குறையவில்லை. இதினால் நடந்தது என்ன? மொர்தெகாயின் தலை உயர்த்தப்பட்டது. ஆமானால் தூக்குமரம் மொர்தெகாய்க்கு ஆயத்தமானது உண்மை தான். ஆனால் தூக்குமரத்தில் தூக்கப்பட்டதோ மொர்தெகாய் அல்ல.

ஆம் பிரியமானவர்களே, உங்களுக்கு விரோதமான எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். ஆயுதங்கள் விரோதமாய் உருவாகாது என்று வேதம் கூறவில்லை. உருவாகும் ஆனால் வாய்க்காது. தொடர்ந்து தியானிக்கலாம். ஆண்டவர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக! ஆமென்.

**- தொடரும்**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
***திருமதி. ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

## நன்றி செலுத்துதல் (Thanks Giving....!!!)

அது, 2012-ம் ஆண்டு. அந்த அபூர்வமான நிகழ்வு நடந்தது, தென்னாப்பிரிக்காவில்! ஒன்று, இரண்டல்ல... மொத்தம் 31 யானைகள். எல்லாம் சேர்ந்து ஒரு பயணம் நடத்தின. விஷயம் வேறு ஒன்றுமில்லை. அந்த யானைகளுக்குப் பிரியமான ஒரு மனிதர் இறந்துபோனார். அவருக்கு நன்றி செலுத்துவதாக யானைகள் எல்லாம் ஒரு பெண் யானையின் தலைமையில் ஒன்று சேர்ந்தன.

லாரன்ஸ் அந்தோணி, எழுத்தாளர், சூழலியலாளர், யாத்ரீகர். தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகன்னஸ்பர்க்கில் பிறந்தவர், சுரங்க வேலை காரணமாக அவர் குடும்பம் ஆப்பிரிக்காவில் உள்ள ஜாம்பியா மாகாணத்தில் வசித்து வந்தனர்.அவர் இருந்தது அடர்ந்த காட்டுப்பகுதி. ஒருமுறை ஒன்பது யானைகள் கொண்ட குழுவை ஓர் ஆபத்திலிருந்து காப்பாற்றி, பத்திரமாகக் காட்டுக்குள் அனுப்பிவைக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அது மட்டும் நடக்கவில்லையென்றால், அவை வேட்டையாடப்பட்டு, இறந்துபோயிருக்கும். இந்த யானைகள் கூட்டமாக ஒன்று சேர்ந்து அவர் இறந்த பொது நன்றி செலுத்த வந்தது என்றால் அது எவ்வளவு ஆச்சரியமான விஷயம் ...!!

பலவேளைகளிலும் நம் வாழ்வில் ஆண்டவர் செய்த நன்மைகளையும், அவரது உன்னதமான வழிநடத்துதலையும் மறந்துவிடுகிறோம் என்பதை நம்மால் ஒத்துக்கொள்ள முடியுமா? அதனால்தான் நம் வாழ்வில் அடிக்கடி சோர்வு, முறுமுறுப்பு, பதட்டம் என்பவற்றுக்கு ஆளாகிறோம். இது ஏன்? இதுவரை ஆண்டவர் நம்மை நடத்திய அற்புதமான வழிகளை மறவாமல் அவற்றை சிந்தித்து, எப்போதும் அவருக்கு நன்றி கூறுவோமானால், தொடர்ந்தும் அவர் நம்மை நடத்துவார் என்ற நம்பிக்கை வருமல்லவா!

**இறைவனின் எதிர்பார்ப்பு என்ன ?**

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், அநேகரைக் குணப்படுத்தி, அநேகரைப் பிசாசின் கட்டுக்களில் இருந்து விடுதலையாக்கி, பலருக்கும் பல நன்மைகளைச் செய்தார். ஒருமுறை அவரிடம் பத்துக் குஷ்டரோகிகள் தாங்கள் சொஸ்தமாக வேண்டுமென வந்திருந்தனர். அந்நாட்களில் குஷ்டரோகிகளை யாரும் அணுகமுடியாது; அவர்கள் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் சுகமடைந்தால் முதலாவது ஆசாரியருக்குத் தங்களைக் காண்பிக்க வேண்டும் என்பது கட்டளை. இயேசு தம்மை நாடிவந்த பத்துக் குஷ்டரோகிகளையும் நோக்கி, "நீங்கள் போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்றார். அப்படியே அவர்கள் போகும்போதே குணமானார்கள். அவர்களில் ஒருவன், தான் குணமாகிவிட்டதைக் கண்டதும், திரும்பி இயேசுவிடம் வந்து அவர் பாதத்தில் விழுந்து நன்றி செலுத்தினான். இயேசு அவனிடம் "குணமானது பத்துப்பேர் அல்லவா? மற்ற ஒன்பதுபேரும் எங்கே" எனக் கேட்டார். அந்த ஒன்பதுபேரும் பின்பும் வரவேயில்லை.

மற்ற ஒன்பது தொழுநோயாளிகளும் பொல்லாதவர்கள் அல்ல. இயேசுமீது தாங்கள் வைத்திருந்த விசுவாசத்தை அவர்கள் வெளிப்படையாகக் காட்டினார்கள், அவருடைய அறிவுரைக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தார்கள்; ஏன், தாங்கள் குணமானதை

ஆசாரியர்களிடம் காட்டுவதற்காக எருசலேமுக்கும் போனார்கள். இயேசு இரக்கப்பட்டு செய்த உதவியைக் குறித்து அவர்களுக்கு நன்றியுணர்வு இருந்தது, ஆனால் அதை செயல் பாட்டில் காண்பிப்பதற்கு தவறி விட்டார்கள்.

**தாவீதின் நன்றியறிதல்:**

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி;" என்று கர்த்தரை ஸ்தோத்தரிக்க ஆரம்பிக்கும் தாவீது இராஜா " அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" (சங்.103:1,2)." என்று சொல்லி அதற்கான காரணத்தையும் வெளிப்படுத்துகிறார். அப்படியானால், அவர் செய்த உபகாரம் என்னவென்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உபகாரம் என்பது கர்த்தர் நமக்கு செய்த கனிவான செயல்களைக் குறிக்கிறது. அவர் அருளிய நன்மைகளைக் குறிக்கிறது; அவற்றை நாம் மறக்கக் கூடாது. நாம் பிறந்ததுமுதல் இதுவரை நம் வாழ்நாளில் தேவன் நமக்கு செய்த நன்மைகளை, சாட்சிகளை நாம் நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றவர்கள் நமக்கு செய்த நன்மை, தீமைகளை நினைவில் வைத்திருக்கின்ற நாம், நமக்கு நன்மையையே செய்துவருகின்ற கர்த்தருடைய ஆசீர்வாதங்களை ஒருபோதும் மறக்கலாகாது. சங்கீதம் 103:3-5ஆம் வசனங்களில், ஆண்டவர் நமக்காக என்னென்ன செய்கின்றார் என்பதைக் குறித்து தாவீது சொல்கிறார். நம் கர்த்தராகிய ஆண்டவர் தாமே, நம் அக்கிரமங்களை மன்னிக்கிறார், நோய்களைக் குணமாக்குகிறார், ஆத்துமாவைக் காப்பாற்றுகிறார், நம்மை முடிசூட்டுகிறார், அத்துடன் நன்மைகளால் நம்மை திருப்தி ஆக்குகிறார் என்று சொல்லி இறைவன் நமக்கு பாராட்டும் நன்மைகளை பட்டியல் இட்டுக்கொண்டே செல்கிறார்.

**நன்றியறிதலும் காணிக்கையும்:**

காணிக்கை படைத்தல் என்பது வேதத்தின் அடிப்படையிலே நன்றியறிதலின் ஒரு வெளிப்பாடாக அல்லது செயல்பாடாக திருச்சபையின் ஒழுங்கில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆபேலின் காணிக்கையை ஆண்டவர் ஏற்றுக்கொண்டதும் , ஏழை விதவையின் காணிக்கையை இயேசு அங்கீகரித்ததையும் நாம் அறிவோம். காணிக்கையை விட அதை செலுத்துகிறவர்களின் உள்ளமும் விசுவாசமுமே முக்கியமானது. எபிரேயர் (11.17)-ல் "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" என்று பவுல் அடிகளார் சுட்டிக்காண்பிப்பதை பார்க்கிறோம்.

நன்மை பெற்றுக்கொள்வதற்குக் காட்டுகின்ற தீவிரத்தை, நன்றி சொல்லுவதில் நாம் காட்டுவதில்லையே, ஏன்? வாழ்க்கையில் தேவைகள் ஏற்படும்போது, "இயேசுவே எனக்கு உதவி செய்யும். என் தேவைகளைச் சந்தியும்" என்று கதறி ஜெபிப்போம். தேவன் நமது ஜெபங்களைத் தள்ளுகிறவர் அல்ல. அவர் நமக்குக் கிருபையாய் தந்த பதில்களைக் கணக்கிட முடியுமா? பதில் கிடைத்தவுடன் உணர்ச்சிவசப்படும் நாம் உண்மையாகவே தேவனுக்கு நன்றியாய் ஜீவிக்கிறோமா? திரும்பிவந்த குஷ்டரோகியைக் குறித்து மகிழ்ச்சியடைந்த ஆண்டவர், இன்று நம்மைக் குறித்தும் மகிழ்ச்சியடைவாரா? அவர் செய்த நன்மைகளை எண்ணி எண்ணி வாழ்நாள் முழுவதும் அவருக்கு நன்றி செலுத்துகிறவர்களாய் காணப்படுகிறோமா? தேவன் தாமே தூய ஆவியானவரின் உதவியோடு நன்றியறிதல் உள்ளவர்களாய் நம்மை கிறிஸ்துவுக்குள் உள்ள உறவில் மென்மேலும் பலப்பட கிருபை அருள்வராக. ஆமென்.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Jayachandra Raja**

## நன்றி மறப்பது நன்றன்று



யாராவது ஒருவர் நமக்கு ஒரு உதவியை செய்யும்போது அது சிறியதோ பெரியதோ எதுவாயிருந்தாலும், நாம் உடனே 'நன்றி' என்று சொல்கிறோம். நம் பிள்ளைகளுக்கும் அதை சிறு வயதிலிருந்தே சொல்லிக் கொடுக்கிறோம். அப்படியானால் நம்மை இவ்வுலகில் படைத்து, நமக்கு இரட்சிப்பை அளித்து, இந்நாள் வரை காத்து வரும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நாம் எத்தனை கோடி நன்மைகள் செலுத்தினாலும் போதாது. வேதாகமத்தில் தேவனுக்கு நன்றி செலுத்திய மக்களும் உண்டு. நன்றி செலுத்த மறந்தவர்களும் உண்டு.

***வேதத்தில் காணும் நன்றி படைப்புகளில் சில....***



- மோசேயும் மிரியாமும் யாத்.15-ம் அதிகாரத்தில் பார்வோனின் சேனைக்கும் செங்கடலுக்கும் தப்பி வந்த போது, இஸ்ரவேல் மக்களுடன் சேர்ந்து கர்த்தருக்கு நன்றி செலுத்தினர்.
- அன்னாள் குழந்தையில்லாமல் மனமுடைந்து இருந்தபோது, தேவனிடம் விண்ணப்பம் பண்ணி சாமுவேலை பெற்றெடுத்தாள். அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 1சாமு. 2:1-10 வசனங்களில் அன்னாள் தேவனை எவ்வாறு துதித்தாள் என்று கூறப்பட்டுள்ளது.
- தாவீது, பெலிஸ்தரின் கையிலிருந்து தேவன் தன்னை தப்புவித்தபோது, தேவனுக்கு நன்றி செலுத்தி அவரைத் துதிக்கிறார்(2சாமு.22). கன்மலையும், கோட்டையுமாய் இருந்து பலவானின் கையிலிருந்து தன்னை தப்புவித்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறார் தாவீது.
- சாலமோன் எருசலேம் தேவாலயத்தை பிரதிஷ்டை செய்யும்போது, இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் செய்த நன்மைகள் அனைத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார் (1இராஜா.8:14-21). தன் தகப்பனுக்கு கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேற்றிய தேவனுக்கு நன்றி செலுத்துகிறார் சாலமோன்.
- எலிசபெத் தன் வயதான காலத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் கர்ப்பந்தரித்தபோது, தேவனைப் புகழ்ந்து நன்றி செலுத்துகிறாள் (லூக்கா 1:24,25). என் நிந்தையை நீக்கும்படியாக கர்த்தர் என்மேல் கடாட்சம் வைத்து என்னை கர்ப்பந்தரிக்க செய்தார் என்று கூறுகிறாள் எலிசபெத்.



- இயேசு பிறக்கப்போகும் செய்தியை தூதன் மூலம் பெற்று, அதிசயமாய் கர்ப்பந்தரித்த மரியாள் தன் தாழ்வில் தன்னை நினைத்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறாள் (லூக்கா 1:46-55).
- நமக்கு அனைத்து காரியங்களிலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய இயேசுவானவர், ஐந்து அப்பம் இரண்டு மீனை ஐயாயிரம் பேருக்கு போஷிக்கும் முன், அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணினார்(யோவான் 6:11). ஜனங்கள் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள். 12 கூடைகள் நிறைய மீதியான துணிக்கைகள் இருந்தன.
- பத்து குஷ்டரோகிகள் இயேசுவிடம் வந்து சுகம் பெற்றனர். அதில் ஒருவன் மட்டும், தான் ஆரோக்கியமானதைக் கண்டு திரும்ப வந்து ஆண்டவரின் பாதத்தில் வந்து அவருக்கு நன்றி செலுத்தினான் (லூக்கா 17:15,16).
- பவுல், பிலிப்பு பட்டணத்தார் சுவிசேஷத்திற்கு உடன்பட்டவர்களாய் இருப்பதை நினைத்து எப்பொழுதும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார்(பிலி.1:3-5). ஆத்தும அறுவடையின் பலனை கண்டு ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறார் பவுல்.

இன்னும் அநேக உதாரணங்களை வேதாகமத்தில் காணமுடியும்.

வேதாகமத்தின் எடுத்துக்காட்டுகளில் பார்த்தது போல,

- நமக்காக யுத்தம் செய்யும் தேவன் நம் தேவன்.
- சிறுமையும் எளிமையுமானவரை கண்ணோக்கும் தேவன் நம் தேவன்.
- ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் தேவன் நம் தேவன்.
- பெலிஸ்தரைப் போன்று நம் வாழ்விலும் அநேக விதத்தில் கஷ்டங்கள் வந்தபோது நமக்கு துருகமும் கோட்டையும் பாதுகாவலருமாயிருந்தவர் நம் தேவன்.
- வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் தேவன் நம் தேவன்.
- இரட்சிப்பை அருளி நித்திய ஜீவனைக் கொடுத்தவர் நம் தேவன்.

தேவனின் மகத்துவத்தை நாம் எண்ணி பார்க்கும்போது அவருக்கு நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. மரியாளைப் போல நம் ஆத்துமாவும், நம் சரீரத்தோடு சேர்ந்து கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் எண்ணி துதிக்க வேண்டும் (சங்.103:1,2). தேவனுக்கு நன்றி செலுத்தி நம் காரியங்களை செய்யும்போது, குறைவானதும் நிறைவானதாக மாறும்.

நமக்கு தேவையுள்ளபோது ஆண்டவரின் பாதத்தில் கெஞ்சும் நாம், அவர் நமக்கு பதிலளித்து தேவையை நிறைவேற்றிய பின்னும் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவருக்கு நன்றி செலுத்துகிறோமா என்று சற்று சிந்திப்போம். இல்லையேல் நன்றி செலுத்த மறந்த ஒன்பது குஷ்டரோகிகளை தேடியது போல, தேவன் நம்மையும் தேடுவார். தாவீதரசனைப் போல எப்போதும் கர்த்தரின் கிருபையை எண்ணி அவருக்கு நன்றி செலுத்த ஆண்டவர் நமக்கு அருள்புரிவாராக!

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### அன்னாள்

அன்னாளைக் குறித்து 1சாமு. 2:1-21-ல் நாம் வாசிக்கிறோம். எப்பிராயீம் மலை தேசத்தில் உள்ள ராமதாயீம் என்ற ஊரில் எல்க்கானாவும் அவனுடைய இரண்டு மனைவிகளான அன்னாளும் பெனின்னாளும் வசித்து வந்தார்கள். பல ஆண்டுகள் கடந்தும் அன்னாளுக்கு குழந்தையில்லை. அனுதினமும் கண்ணீரின் வாழ்க்கையைத் தான் அனுபவித்திருந்திருப்பாள். துன்புறுத்தப்பட்ட சூழ்நிலை. தன்னைத்தானே வெறுக்கத்தக்கதான நிலைமை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்னாள் செய்த காரியம் கர்த்தரை பணிந்து கொள்ள சீலோவிலுள்ள ஆலயத்திற்கு செல்வாள். அன்னாளின் கணவன் எல்க்கானாவினால் அதிகமாக நேசிக்கப்பட்டாள். அவன் அவளுக்கு இரட்டிப்பான பங்கை கொடுக்கிறவனாக இருந்தான். இருப்பினும் தனக்கு பிள்ளை இல்லை என்ற குறைவை யாரிடம் கூறினாலும் தீர்வு கிடைக்காது என்று அறிந்தவள், முழு விசுவாசத்தோடு கர்த்தரை நாடினாள். கர்த்தருடைய ஆலயத்தில் வந்து மனங்கசந்து அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். பொருத்தனையும் செய்தாள். கர்த்தர் (தேவரீர்) உம்முடைய அடியாளின் சிறுமையை கண்ணோக்கிப் பார்த்து ஓர் ஆண் பிள்ளையைக் கொடுத்தால் அவனைக் கர்த்தருக்கென்று கொடுப்பேன் என்றாள். ஜெபித்து விட்டு மனபாரம் லெகுவானவளாய் திரும்பிச் சென்றாள். முழு விசுவாசத்தோடு, கண்ணீரோடும் வெகுநேரம் ஜெபித்தாள் என பார்க்கிறோம். அன்னாளை தேவன் நினைத்தருளினார்.

விண்ணப்பத்தைக் கேட்ட கர்த்தர் அன்னாளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார். கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று செய்த பொருத்தனையை நிறைவேற்றி கர்த்தருக்கு அர்ப்பணித்தாள்.

நாம் அநேக ஆசீர்வாதங்களை கர்த்தரிடத்தில் கேட்டு பெற்றுக் கொள்கிறோம். அநேக முறை நன்றியறிதல் இல்லாதவர்களாக மறந்து விடுகிறோம். ஆனால் அன்னால் துதி பாடலை பாடி சாமுவேலை அவர் பாதத்தில் காணிக்கையாக செலுத்தினாள். ஆழமான விசுவாசமும், முழுமையான அர்ப்பணிப்பும், நன்றியுள்ள இருதயமும் நம் வாழ்க்கையில் காணப்பட வேண்டும்.

வாழ்க்கையில் என்ன துக்கம் வந்தாலும், மனிதனிடம் அல்ல, நம் புருஷனிடம் அல்ல, மனைவியிடம் அல்ல. தேவனிடம் நம் இருதயத்தை ஊற்றி ஜெபிக்க வேண்டும். பொருத்தனை பண்ணினால் அதை செலுத்த மறக்கக் கூடாது. சக மனிதர்களிடம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம். ஒவ்வொரு நிமிடமும் நம்மை உயிரோடு வைத்து, நம்மை ஆசீர்வதிக்கிற தேவனைத் துதிப்போம். வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்துவோம்.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,




The theme for the month of November is "**THANKSGIVING**".

When we give thanks to God, we glorify God, as we are focusing not on the gifts, but the Giver.

We realize that everything we have comes from God.





The more we thank Him, the more we see Him working in us, and around us.


We are able to see God's hand over all our circumstances.

Being thankful is the key to being content.

## SOME THINGS THAT WE CAN TO BE THANKFUL FOR?






- His constant **LOVE**. (Ps. 106:1)
- His daily **PROVISIONS** (Ps. 28:7)
- His Grace and **FORGIVENESS**. (Ps. 103:2,3)
- His Holy **WORD.** (Col. 3:16)
- His marvellous **CREATION**. (Ps. 136:3-9)
- His wonderful **PEOPLE.** (1st Thess. 1:2)
- His victory on the cross, and his master **PLAN** for us. (1st Corin. 15:57)




**WHEN WE THANK GOD AND ACKNOWLEDGE WHAT HE'S DONE FOR US, WE PROCLAIM A PERSONAL, CARING, LOVING GOD TO THE WORLD AROUND US.**

# THE LETTERS OF PETER; JAMES and JUDE




**1st & 2nd - Peter** **Author** – Peter

**Date** – AD 63

**Chapters** – 5; 5

**Summary** – Jesus Christ suffered for us, leaving us an example so that we might follow in His steps.





**James -** **Author** – James; Half-brother of Jesus

**Date** – AD 47

**Chapters** – 5

**Summary** – James addressed topics including suffering, temptation, the tongue, wisdom, truthfulness, pride, and anger, while insisting that Christians be doers of the word and not hearers only.





**Jude -** **Author** – Jude; Half-brother of Jesus

**Date** – AD 66


**Chapters** – 1

**Summary** - Jesus Christ is the one who is able to keep us from stumbling and will one day present all believers faultless before the throne of God.

## SAYING IT WITH PICTURES – THANKGIVING…




Enter his gates with thanksgiving and his courts with praise; give thanks to him and praise his name. – PSALM 100:4 NIV




Praise ye the LORD. O give thanks unto the LORD; for he is good: for his mercy endureth for ever. – PSALM 106:1 KJV


# TINY TOTS SECTION

## COLOR IN...









## We Can remember to Thank Our Father in Heaven, when we Thank Our Earthly Parents.

# Happy Helping

Daddy is helping Thea put her toys away.
Can you help them find all 10 blocks to put in the toy box?




BibleWise

# Thanksgiving Psalms


Use brown, red, orange, and yellow crayons to trace the phrase below.

"Let us come before his presence with thanksgiving, and make a joyful noise unto him with psalms."

Psalm 95:2



## We Need to Give Thanks to God Because He Takes Care of All Our Daily Needs…



**Thankful for God Giving Me What I Need**
**Secret Code**

Each number stands for a letter of the alphabet. Write the correct letter in the blank to find the coded words and phrase.

**Deuteronomy 11:13-15**

Code key

| | | |
|---|---|---|
| A 1 | J 10 | S 19 |
| B 2 | K 11 | T 20 |
| C 3 | L 12 | U 21 |
| D 4 | M 13 | V 22 |
| E 5 | N 14 | W 23 |
| F 6 | O 15 | X 24 |
| G 7 | P 16 | Y 25 |
| H 8 | Q 17 | Z 26 |
| I 9 | R 18 | |

8 5

16 18 15 22 9 4 5 19


23 8 5 14

23 5 1 18 5

15 2 5 4 9 5 14 20 .

You can be thankful because of God's

16 18 15 22 9 19 9 15 14






# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION FROM THE BOOKS OF PETER; JAMES AND JUDE

1. Who is our proper standard for holiness? (1st Peter 1:16)

| | |
|---|---|
| a. God | b. Other Christians |
| c. The Pastor | d. All of the above |

2. What should we desire like newborn babies? (1st Peter 2:2)

| | |
|---|---|
| a. Forgiveness | b. Salvation |
| c. Word of God | d. Holiness |

3. To what animal does Peter liken those who have gone astray? (1st Peter 2:25)

| | |
|---|---|
| a. Dogs | b. Sheep |
| c. Pigs | d. Birds |

4. What should a person do to desire life and to see good days? (1st Peter 3:10-11)

| | |
|---|---|
| a. Refrain his tongue from evil | b. Turn from evil and do good |
| c. Seek peace and ensue it | d. All of the above |

5. What should we cast upon God? (1st Peter 5:7)

| | |
|---|---|
| a. Our cares | b. Our debts |
| c. Our sins | d. All of the above |

6. Who will come in the last days? (2nd Peter 3:3)

| | |
|---|---|
| a. Haters | b. Scoffers |
| c. Gossipers | d. All of the above |

7. How should we grow? (2nd Peter 3:18)

| | |
|---|---|
| a. In wisdom and understanding | b. In faith and sincerity |
| c. In grace and knowledge of Jesus | d. None of the above |

8. What attitude should we have when we fall into various trials? (James 1:2)

| | |
|---|---|
| a. Joy | b. Prayerfulness |
| c. Sorrow | d. Soberness |

9. What fruit will testing (trials) produce? (James1:3)

| | |
|---|---|
| a. Love | b. Joy |
| c. Peace | d. Patience |

10. What object does James use to illustrate a double-minded man? (1:6-8)

| | |
|---|---|
| a. An yoyo | b. Mirror |
| c. Waves of the sea | d. Roller coaster |

11. Which of the following are attributes that Jude uses to ascribe to God? (25)

| | |
|---|---|
| a. Glory and Honor | b. Majesty |
| c. Might and Authority | d. All of the above |

12. How many verses are there in the book of Jude?

| | | | |
|---|---|---|---|
| a. 5 | b. 15 | c. 25 | d. 35 |

## GIVE THANKS IN ALL CIRCUMSTANCES

Follow the path to the word on the right that completes each statement. Then write the letter in the circle.

◯ 1. We can expect to experience both ___ times and bad.

◯ 2. We are commanded to give thanks in all ___.

◯ 3. Gratefulness means to show ___ for what we've been given.

◯ 4. Jesus healed 10 men who had ___.

◯ 5. Only one man returned to give ___.


◯ 6. The Apostle Paul endured many ___ for the sake of Christ.

◯ 7. Paul understood that in his weakness God is ___.

◯ 8. Christians can rejoice in suffering because they have the ___ of God.

◯ 9. No matter what is happening, we know that God is in ___.

◯ 10. God gives us ___ when we pray and ask him for help in the bad times.



A. PROMISES
B. STRONG
C. LEPROSY
D. CONTROL
E. THANKS
F. CIRCUMSTANCES
G. PEACE
H. GOOD
I. APPRECIATION
J. HARDSHIPS

# PEOPLE IN THE BIBLE

Which person expressed gratitude for these blessings.



| Name | Blessing |
|---|---|
| ___ 1. Hannah | A. Rebuilding of the walls of Jerusalem |
| ___ 2. Jesus | B. Birth of John the Baptist |
| ___ 3. One of the ten lepers | C. Marriage of Boaz |
| ___ 4. Abraham and Sarah | D. Samuel's birth |
| ___ 5. Zacharias and Elisabeth | E. Marriage to Jacob; birth of Joseph |
| ___ 6. Nehemiah | F. Untouched by the fiery furnace |
| ___ 7. Ruth | G. Lazarus' resurrection |
| ___ 8. Rachel | H. Great fish releases him |
| ___ 9. Children of Israel | I. Defeat of Goliath |
| ___ 10. Moses | J. Healing of leprosy |
| ___ 11. Joshua | K. Deliverance from Egypt |
| ___ 12. David | L. Safe in the lions' den |
| ___ 13. Jonah | M. Isaac's birth |
| ___ 14. Daniel | N. Walls of Jericho fell down |
| ___ 15. Three Hebrew Boys | O. Ten Commandments |

## Bible Verse Cryptogram

*The Bible verse has been written in code. Use the decoder at the top of the page to help break the code (the letters on top are the correct answers, the letters on the bottom are the code). Then fill-in the correct letter in the blank space above each code letter in the text.*

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | T | | | | | | | | | | | | | | | | | | | | |
| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |

S B  R O R X Y  F D S B N  N S O R  F D U B I V :

G T X  F D S V  S V  F D R  W S H H  T G  N T K  S B

L D X S V F  Z R V A V  L T B L R X B S B N  Y T A .

~ S  F D R V V U H T B S U B V  5 : 1 8

**Complete the verse from 1st Thessalonians 5:18**

BibleWise

# Who Gave Thanks?

Match the statements of gratitude with the correct person from the Bible. Some names are used more than once.

- I'm grateful for gentle lions.
- I thank God for parting the Red Sea.
- I'm grateful for my cousin, John the Baptist.
- We'll always thank God for saving us from the intense fire.
- I'm grateful I didn't need Saul's armor.
- I'm grateful to recognize that the devil doesn't have any power.
- I'm glad God let me return to Nineveh.
- I'm grateful Jesus forgave me for denying him 3 times.
- I'm grateful Jesus selected me as one of his disciples even though I was a tax collector.

3 HEBREW BOYS

DAVID

MOSES

MATTHEW

JESUS

JONAH

PETER

DANIEL

## HOW WELL DO YOU KNOW YOUR BIBLE STORIES?


## Thanksgiving Word Scramble

We have many things to be thankful for. Unscramble the letters in the apples to find out what some of them are. Write the words on the lines below the basket.




BibleWise

Praying and Giving Thanks
*1 Thessalonians 5:17-18*



## FOOD FOR THOUGHT...

## A THANKSGIVING DINNER...




## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

1. The theme for the month of November is: ____________________.
2. We need to give God thanks for _______; _____________; ________________; ___________; __________________; ________________; _________.
3. The book of Jude has _____________ chapter.
4. Psalms 100:4 says - ________________________________________________
____________________________________________________________________

Children, this Thanksgiving and every day henceforth, let us give Thanks to GOD from whom All Blessings Flow.

**God bless,**
**Mrs. Briliya Jeyaseelan.**

# வேத வினாக்கள்

## எரேமியா 27 – 52 அதிகாரங்கள்

### (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. யார் தன்னை சந்திக்க வந்தபோது எரேமியா கர்த்தருடைய வார்த்தையை உறுதியாக விசுவாசித்தார்?
2. சிறையில் இருந்துக் கொண்டு எரேமியா என்ன வாங்கினார்?
3. பட்டயத்திற்குத் தப்பினோர் இரக்கம் பெற்றது எங்கே?
4. எப்போது கர்த்தர் பெரிய காரியங்களை அறிவிப்பார்?
5. எரேமியா தீர்க்கதரிசனம் சொல்வதை விரும்பாதவர் யார்?
6. கல் கட்டப்பட்டு தண்ணீரில் தாழ்த்தப்பட்டது என்ன?
7. பாபிலோன் ராஜாவுக்கு துர்ச்செய்தி அறிவிக்க சென்றவர்கள் யார் யார்?
8. யார் சிதறிப்போனார்கள்?
9. எரேமியா 43-லிருந்து 46 வரை உள்ள அதிகாரங்களில் காணப்படும் எகிப்தின் ராஜாக்கள் இரண்டு பெயர் எழுதவும்.
10. கவலையின்றி அழுதவர் யார்?
11. தேடினாலும் காணப்படாதவை எவை?
12. மகா நேர்த்தியான கடாரி எது?
13. அந்நிய தேசத்திற்கு சென்று, அக்குடிமகன் ஒருவருக்கு பணமளித்து உதவினேன். நான் யார்?
14. விருதாவாய் திரும்பாதது என்ன?
15. ஏன் சிதேக்கியா எரேமியாவை அடைத்து வைத்தான்?
16. எகிப்தின் குமாரத்தி எங்கு, எதற்கு செல்ல வேண்டும்?
17. யார் ஏவி, எரேமியா பேசியதாக சொல்லப்பட்டது?
18. ஆளுகிறவர்களுக்கும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கும் ஒரே விதமான ஆசீர்வாதமாம். வாசிப்பது எங்கே?
19. ஏன் எரேமியா ஜெபித்தார்?
20. கெட்ட அத்திப்பழங்களுக்கு ஒப்பிடப்பட்டோர் யார்?
21. கட்டுவிக்கப்பட்ட கூட்டத்திலிருந்து விடுதலைப் பெற்றவர் யார்?
22. பாபிலோன் விழுந்தவுடன் என்ன செய்யப்பட்டது?
23. இளைப்பாறுதலை காணாமற்போனேன் என்று சொன்னவர் யார்?
24. அறுக்கப்பட்டதும், சுட்டெரிக்கப்பட்டதும் ஒன்றே. அது எது?
25. சம்பிரதி என்று சொல்லப்பட்ட நபர்கள் யார்? யார்?
26. எரேமியாவின் தகப்பன் பெயர் என்ன?
27. கண்டுபிடியுங்கள் : ஓரெழுத்துடைய நான் சம்பிரதியால் உபயோகிக்கப்பட்டேன். நான் யார்?
28. பாருக்கு எரேமியாவின் வார்த்தைகளை ஜனங்கள் எல்லாரும் கேட்க எங்கு வாசித்தான்?
29. எதில் திராட்சரசம் நிரப்பப்பட்டு இருந்தது?
30. எதை விட்டு திரும்பி, எதை சீர்ப்படுத்த வேண்டும்?

## அக்டோபர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் எரேமியா 1– 26 |
|---|---|---|
| 1 | நேபுகாத்நேச்சார் | 25:9 |
| 2 | கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்க வேண்டும். | 17:7,8 |
| 3 | பண்படுத்தப்பட்ட நிலத்தில் | 4:3 |
| 4 | தீமை | 25:32 |
| 5 | உரியா | 26:21 |
| 6 | 21-வது ஆண்டு | 25:1,3 |
| 7 | அக்கிரமங்கள், பாவங்கள் | 5:25 |
| 8 | எக்காள சத்தம் | 6:17 |
| 9 | கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதர்கள் | 24:5 |
| 10 | பொருளாசைக்காரர் | 6:13 |
| 11 | கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை | 23:20 |
| 12 | யோயாக்கீம் | 25:1 |
| 13 | சிதேக்கியா | 24:8 |
| 14 | அந்நிய தேசத்திலே மரித்தனர் | 22:11,12, 24,26 |
| 15 | ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய ஆண்டவரை | 2:13 |

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் எரேமியா 1– 26 |
|---|---|---|
| 16 | ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் சகல ஜனங்களும் - எரேமியாவிடம் | 26:8 |
| 17 | வேறே பாண்டமாக வனைந்தார் | 18:4 |
| 18 | யூதா | 3:10 |
| 19 | பஸ்கூர் | 20:3 |
| 20 | "நீ காண்கிறது என்ன?" | 1:11,13 |
| 21 | எகோனியா | 24:1 |
| 22 | பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி | 23:13 |
| 23 | உக்கிரமாகிய மதுபானம் | 25:16 |
| 24 | மனைவியைப் போல | 3:20 |
| 25 | பேச அறியாதிருக்கும்போது | 1:6 |
| 26 | யோயாக்கீம் | 22:14,18 |
| 27 | எரேமியா பிறந்த நற்செய்தியை அவர் தகப்பனுக்கு கூறிய நபர் (சபித்தார்) | 20:15 |
| 28 | 23 வருஷமாக | 25:3 |
| 29 | எழுபது வருஷம் | 25:11 |
| 30 | முழு இருதயத்தோடு திரும்பாமல், கள்ளத்தனமாக திரும்பியதால் | 3:10 |

**குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.**

## அக்டோபர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs.Priya Ranjith
2. Mrs. Sheeba Merlin
3. Mrs. Jebaseeli Asir
4. Mrs. Febell Jeevagi Thomas
5. Mrs.Ajita Ebi
6. Mrs.Jenis Trison
7. Mrs. Deepa Vincent
8. Mrs. Annie Max
9. Mrs. Sheneega Stanely
10. Mrs.Manuel Sarah Foulkes Moore
11. Mrs.Jeevamoni Joseph
12. Mrs.Subija Jino
13. Mrs. Shiny Brindha Alwin
14. Mrs.Helen Sharmila
15. Mr. Emmanuel Vanya
16. Mrs.Jenila Gnanaraj
17. Mrs. Percia David
18. Ms.Persis Seljah
19. Mrs. Sharmila Rajesh
20. Mrs.Annie Vigin
21. Mr.Lipny

## Children who answered October - 2022 Quiz

1. Aadhav Steve Matthew
2. Steffi Prisilla
3. Juanita Carys.J
4. Evelyn Gracia
5. Adelyn Victoria Jeyaseelan
6. Abryan Gabriel Jeyaseelan
7. Gabrilyn Hannah
8. Jonathan Geosper David
9. Geoffrey Jerome David
10. Jevlyn Ana
11. Leona Juliet .J.B
12. Andrew Jones Arun
13. Johanan Paul Jino
14. Joanna Paul Jino
15. Jeya Jehosheba Mahear
16. Jeya Joshua Maher
17. Johan Sam Manuel
18. Joha Anit Manuel
19. Giana Elin
20. Liana Erin
21. Darion Lemuel
22. Amy Jazzlyn
23. Diyas Dinesh
24. Sam Jesvin
25. Jesse Grace
26. Shawn Samuel
27. Sheena Samuel
28. Janessa Max
29. Jen Scudd
30. Jim Scott
31. Leonel I.J. Stalin
32. Linuel I.J. Sherwyn
33. Keren Grapeson
34. Abner Theophiilus Grapeson
35. Hadriel Adventier
36. Jerilyn Pushpam Nelson
37. Phoebe Rebekah Solomon

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி

14-06-1912 – 20-01-1997

### இந்தியாவை நோக்கி போர்க்கப்பலில் பயணம்

அறிவிப்பு வந்தது! உலகமகா யுத்தம் நடந்த நாட்களில் அமெரிக்காவிலிருந்த மத்திய தரைக்கடல் மார்க்கமாகச் செல்லும் முதல் போர்க்கப்பலில் இந்தியா செல்லவிருக்கும் இந்த நான்கு பெண்களும் பயணிக்கவேண்டுமென்பதே அந்த அறிவிப்பு. அது சரக்குக் கப்பலோ, பயணக்கப்பலோ அல்ல. பாகிஸ்தானின் சிந்துத் துறைமுகத்தில் காத்து நிற்கும் போர்வீரர்களைச் சுமந்து வரப் பயணிக்கும் கப்பல் அது. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல" (ஏசாயா 55:8) என்ற தேவன் தமது பிள்ளைகளுக்காய் ஆயத்தம் பண்ணிய விசேஷக் கப்பல் அது. போர்வீரரின் மனைவிகள், பிள்ளைகள் அவர்களோடு பரமன் அன்பைப் பாரதமண்ணில் பறைசாற்றச் செல்லும் வீராங்கனைகளையும் தாங்கிய கப்பல் தயார்நிலையில் நின்றது.

உலகப் போருக்காகக் கடல் கடந்து செல்லும் தங்கள் கணவன்மாரை அனுப்பிவைத்த இப்பெண்மணிகளை 'வீரப்பெண்கள்' என வர்ணித்தனர் மக்கள். கடைச் சொட்டு இரத்தம் கொட்டப்படும் வரை தங்கள் ஆத்தும மணாளனுக்காய்ப் போர் புரியச் செல்லும் இந்த நான்கு புதுமைப் பெண்களின் வீரத்தின் முன் அந்த போர்வீரரின் மனைவிகளின் வீரம் தலைவணங்கியது. அங்கு வந்திருந்த உலக நற்செய்தி ஊழியக் காரியதரிசி இந்த பெண்களை ஜெபித்து வழியனுப்பினார். போர்க்கப்பல் புறப்படுவதற்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டது. முப்பத்து மூன்று வயது

நிரம்பிய ஈடித் பெர்ல் மார்கன் அவருக்கே உரித்தான அடக்கமான கெம்பீரத்தோடு தன் தேசத்தின் மேல் கண்பதித்தவராய் நின்றார்.

கப்பல் சிந்துத் துறைமுகத்தில் நின்று விடுவதால் இந்த இளம் நங்கையருக்கு ஏற்பட்ட முதல் சவால் பாகிஸ்தானின் சிந்துத் துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்குத் தாங்களே பயண வழிகளைக் கண்டுபிடித்துச் செல்வது. கனவும், இலட்சியமும் 'கர்த்தருக்குச் சேவை' என்ற சிலுவைப் பாதையில் சங்கமித்ததால் யுத்த காலத்தில் பாதுகாப்புப் படையின்றி சென்ற போர்கப்பற் பயணம் அச்சுறுத்துவதாக இல்லாமல் அர்ப்பணிப்பை ஆழப்படுத்துவதாக இருந்தது. எதிரியின் கைக்குத் தப்பவேண்டி ரேடியோ தொடர்பு கூட இல்லாமல் பயணித்த பயணம் இந்த நால்வரும் சவாலாக அல்ல, சாதாரணமாகப்பட்டது. இலட்சியம் உன்னதமானதென்பதால் பாதையின் பயங்கரம் போவோருக்கும் அனுப்புவோருக்கும் ஒரு பொருட்டாயில்லை.

வழியெல்லாம் யுத்தத்தின் கோரம், இடிந்த கோபுரங்களில், பொடிக்கப்பட்ட பட்டணங்களில் தெரிந்தது. முதன் முறையாக ஏதென்ஸ் பட்டணத்தில் கரையொதுங்கியது கப்பல். அப்போஸ்தலர் நடபடிகளின் சில வசனங்கள் இந்த நான்கு இளம் பெண்களுக்கும் ஞாபகம் வந்தது. ஈடித், மேரி, எஸ்தர், வெர்ஜீனியா என்ற இந்த அமெரிக்கப் பெண்கள் ஏதென்ஸ் பட்டணத்தைக் கால் நடையாகவே சுற்றிப் பார்த்தனர். மார்ஸ் மேடையில் கால்பட்டதும் ஏதோ பவுல் அப்போஸ்தலனுடன் நிற்பது போன்ற பெருமிதம் கொண்டனர். கால் நடையாகவே சென்றதால் தாகம் நாவை சுண்டி இழுத்தது. தாகம் தணிக்கும் வண்ணம் அங்கு விற்ற பானத்தை வாங்கிக் குடித்தனர். ஈடித்திற்கு அது ஒத்துக் கொள்ளததால் அவரது உணவுப் பாதை அதிகமாகப் பாதிக்கப்பட்டது. அன்று குளறுப்பட்ட ஜீரணம் அவர் மரிக்கும் வரை அவ்வப்போது அவரைப் பாதித்தது.

கப்பல் பயணமே கிறுகிறுப்பை ஏற்படுத்தும். இதில் அஜீரணத்தால் ஏற்பட்ட அவதி ஈடித்தை மிகவும் பெலவீனப்படுத்தியது. பயணக்களைப்பு ஒருபுறம், வியாதியின் பாதிப்பு மற்றொருபுறமாகக் கப்பலில் ஈடித் மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால் கப்பல் பயணமும், சுகக்கேடும் அவரது அழைப்பை அச்சுறுத்தவில்லை. அதிகநேரம் படுக்கையில் கழிக்க வேண்டியதாயிருந்தது. இலக்கை அடைந்தபின் மேற்கொள்ளும் பணியில் ஓய்வெடுக்க அவகாசமிருக்காது. எனவே இது தனது கட்டாய ஓய்வு என பக்குவப்பட்ட மனதின் பிரதிபலிப்பாய் பொறுமையும், சகிப்புத்தன்மையும் ததும்ப பயணித்தார் ஈடித். கப்பல் சிந்துத் துறைமுகத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. மிகப் பெலவீனமாக இருந்ததால் காலை சிற்றுண்டிக்குக் கூட எழுந்து செல்ல முடியாமல் படுத்தேயிருந்தார் ஈடித். அமரிக்கையையும் நம்பிக்கையையுமே தன் பெலனாகக் கொண்டு அமைதியாய் அறையிலிருந்த ஈடித்தை சிநேகிதிகள் மூவரும் கொண்டுவந்த செய்தி இன்பத்தில் ஆழ்த்தியது.

**- தொடரும்**

## பாடல் பிறந்த கதை

***அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர் [பாமாலை 359]***

**(O Love that will not let me go)**



1. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்
சோர்ந்த என் நெஞ்சம் உம்மில் ஆறும்;
தந்தேன் என் ஜீவன் நீரே தந்தீர்,
பிரவாக அன்பில் பாய்ந்தென்றும்
ஜீவாறாய்ப் பெருகும்.

2. ஜோதி! என் ஆயுள் முற்றும் நீரே;
வைத்தேன் உம்மில் என் மங்கும் தீபம்;
நீர் மூட்டுவீர் உம் ஜோதியாலே;
பேர் ஒளிக் கதிரால் உள்ளம்
மேன்மேலும் ஸ்வாலிக்கும்.

***'அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்'. யோபு 13 : 15***

பக்தன் யோபுவின் சரித்திரம் நமக்குப் புதிதானதல்ல. அவன் தன் வாழ்க்கையில் எத்தனையோ விதமான இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது. சாத்தான் அவனைப் பலவிதமான சோதனைகளுக்குட்படுத்தி, அவனுடைய விசுவாசத்தைப் பரீட்சை பார்த்தான். யோபுவின் வாழ்க்கையில் அவனுக்கு சந்தோஷத்தை உண்டாக்கின எல்லாவற்றையும் அவன் இழக்க நேரிட்டது. அவனுடைய மனைவியும் சிநேகிதரும் அவனை கடவுளுடைய பாதையிலிருந்து விலகத்தூண்டினர். ஆயினும் யோபு மறுமொழியாகச் சொன்னது, 'அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்'. நமது வாழ்விலும், சந்தோஷம் காலங்களிலும் கடவுளிடம் அன்பும், நம்பிக்கையும் கொள்வது சிரமமல்ல. ஆனால் இன்னல்களும் இடுக்கண்களும் நம்மை நெருக்கும்போது, ஆண்டவரின் அன்பை மறந்துவிடாமல், அவரும் நம்மோடு அனுதாபப்படுகிறார் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்வோமாக.

இப்பாடலை எழுதிய ஜார்ஜ் மாத்தீசன் (George Matheson) என்பவர் குருடனாயிருந்து, பல மன வேதனைகளை அனுபவித்துக்கொண்டிருக்கும்போது இதை எழுதினார். அவர் ஒரு பெண்ணைக் காதலித்து, மணநாள் நெருங்கும்போது அவர் கண்பார்வையை இழந்ததால் அப்பெண் அவரை மணந்துகொள்ள மறுத்துவிட்டதாகவும், அதனால் ஏற்பட்ட மனவேதனையால் அவர் இப்பாடலை எழுதினாரென்றும் ஒரு கதை சொல்லப்படுகிறது. இதற்கு ஆதாரமாக இப்பாடலின் முதல் கவியும், மூன்றாவது கவியும் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால் சில காலத்திற்கு முன் அவரது தங்கையான

குமாரி மாத்தீசனைக் கேட்டபோது, அவர் இளவயதிலேயே மங்கின பார்வையுடையவராயிருந்து, சுமார் பதினெட்டு வயதில் கண்பார்வை இழந்ததாகவும், அவர் நாற்பது வயதாயிருக்கையில்தான் இப்பாடல் எழுதப்பட்டது என்றும் கூறியுள்ளார். ஆதலால் மேற்கூறிய கதை வெறும் கட்டுக்கதை என்பது திண்ணம். எனினும் தனக்கு அருமையான ஒருவரது மரணத்தாலும், மற்றும் சில காரணங்களாலும், அதிகமான வேதனையடைந்து, அதை ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில், திடீரென இப்பாடல் அவர் மனதில் உருவானதாகவும், சில நிமிடங்களில் இதை எழுதி முடித்ததாகவும் அவரே கூறியுள்ளார்.

ஜியார்ஜ் மாத்தீசன் 1842ம் ஆண்டு, மார்ச் மாதம் 27ம் தேதி, ஸ்காட்லாண்டு நாட்டில், கிளாஸ்கோ (Glasgow, Scotland) நகரில் தனவந்தரான ஒரு வியாபாரியின் மகனாகப் பிறந்தார்.குழந்தைப் பருவத்திலிருந்தே மங்கின பார்வையுடையவராயிருப்பினும், கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் (University of Glasgow,) பயின்று, 1862ம் ஆண்டில், 'எம்.ஏ' பட்டம் பெற்றார். 1866ல் கிளாஸ்கோ நகரில் சாண்டிபோர்ட் ஆலயத்தில் உதவிகுருவாகத் தம் ஊழியத்தை ஆரம்பித்தார். இரு ஆண்டுகளுக்குப்பின், இன்னிலான் என்னும் ஊரில் ஒரு தனிச்சபைக் குருவாக நியமிக்கப்பட்டார். அவரது பிரசங்கத்திறமை பரவவே, 1886ல் எடின்பரோ நகரில் சுமார் இரண்டாயிரம் அங்கத்தினர் கொண்ட தூய பர்னார்டு ஆலயத்தின் (St. Bernard's Parish Church) குருவாக நியமனம் பெற்று, பதிமூன்று ஆண்டுகள் அங்கு ஊழியம் செய்தார். கண்பார்வை இல்லாததால் அவர் செய்ய ஆசித்த வேத ஆராய்ச்சிகளைச் செய்ய முடியவில்லை. ஆயினும், வேதசாஸ்திர சம்பந்தமாக அவர் பதினேழு சிறந்த புத்தகங்கள் எழுதியுள்ளார். அவரது வேத சாஸ்திரத்திறமைக்காக பண்டிதர் (Doctor of Divinity) பட்டமும், வேறு பல பட்டங்களும் பெற்றார்.

'அன்பே விடாமல் சேர்த்துக்கொண்டீர்' என்ற பாடல் 1882ல் மேற்கூறிய சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டது. இப்போது இது பல பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, சங்கீதப் பண்டிதர் டாக்டர். ஆல்பர்ட் பீஸ் (Albert Lister Peace) என்பவரால் எழுதப்பட்ட 'St. Margaret' என்னும் அழகிய இராகத்தில் பாடப்பட்டு வருகிறது.

அவர் 1906ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், 28ம் தேதி, தமது 64ம் வயதில், ஸ்காட்லாண்ட் நாட்டில் போர்த் நகரில் காலமானார்.

கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு




# ஆலய பக்கம்

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் நவம்பர் – 2022




| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த ஜெபம் - ஆயர் இல்லம் |
| 4 | வெள்ளி | 9.15 pm – 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's Church |
| 6 | ஞாயிறு | 12.00 noon- 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை - ஆயர் இல்லம் |
| | | 6.00 pm – 7.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா - திருமதி. சுபிஜா ஜினோ இல்லம் |
| 8 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 11 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | சிறுவர் ஆராதனை – St.Andrew's church |
| 15 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 18 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 20 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 22 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 25 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தோத்திரப் பண்டிகை ஆராதனை - St.Andrew's church |
| 27 | ஞாயிறு | 9.30 am | தோத்திரப் பண்டிகை - ஏல விற்பனை [Online] |
| | | 7.00 pm – 8.00 pm | வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 29 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | புதன் | 11.45pm | மாத இறுதி ஜெபம் - ஆயர் இல்லம் |

# BIBLE READING FOR CHILDREN – NOVEMBER 2022




| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.11.22 | LUKE | 2 : 39 – 46 |
| 2.11.22 | LUKE | 2 : 47 – 52 |
| 3.11.22 | LUKE | 3 : 1 – 6 |
| 4.11.22 | LUKE | 3 : 7 – 13 |
| 5.11.22 | LUKE | 3 : 14 – 20 |
| 6.11.22 | LUKE | 3 : 21 – 27 |
| 7.11.22 | LUKE | 3 : 28 – 32 |
| 8.11.22 | LUKE | 3 : 33 – 38 |
| 9.11.22 | LUKE | 4 : 1 – 6 |
| 10.11.22 | LUKE | 4 : 7 – 13 |
| 11.11.22 | LUKE | 4 : 14 – 21 |
| 12.11.22 | LUKE | 4 : 22 – 30 |
| 13.11.22 | LUKE | 4 : 31 – 37 |
| 14.11.22 | LUKE | 4 : 38 – 44 |
| 15.11.22 | LUKE | 5 : 1 – 5 |
| 16.11.22 | LUKE | 5 : 6 – 11 |
| 17.11.22 | LUKE | 5 : 12 – 16 |
| 18.11.22 | LUKE | 5 : 17 – 26 |
| 19.11.22 | LUKE | 5 : 27 – 32 |
| 20.11.22 | LUKE | 5 : 33 – 39 |
| 21.11.22 | LUKE | 6 : 1 – 5 |
| 22.11.22 | LUKE | 6 : 6 – 11 |
| 23.11.22 | LUKE | 6 : 12 – 19 |
| 24.11.22 | LUKE | 6 : 20 – 26 |
| 25.11.22 | LUKE | 6 : 27 – 36 |
| 26.11.22 | LUKE | 6 : 37 – 42 |
| 27.11.22 | LUKE | 6 : 43 – 49 |
| 28.11.22 | LUKE | 7 : 1 – 5 |
| 29.11.22 | LUKE | 7 : 6 – 10 |
| 30.11.22 | **LUKE** | 7 : 11 – 17 |




## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - நவம்பர் 2022

| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | ஆதி. 12 : 1 – 9 | வெளி. 18 : 1 – 12 |
| 2 | புதன் | ஆதி. 12 : 10 – 20 | வெளி. 18 : 13 – 24 |
| 3 | வியாழன் | ஆதி. 13 : 1 – 9 | வெளி. 19 : 1 – 10 |
| 4 | வெள்ளி | ஆதி. 13 : 10 – 18 | வெளி. 19 : 11 – 21 |
| 5 | சனி | ஆதி. 14 : 1 – 16 | வெளி. 20 : 1 – 15 |
| 6 | ஞாயிறு | ஆதி. 14 : 17 – 24 | வெளி. 21 : 1 – 13 |
| 7 | திங்கள் | ஆதி. 15 : 1 – 10 | வெளி. 21 : 14 – 27 |
| 8 | செவ்வாய் | ஆதி. 15 : 11 – 21 | வெளி. 22 : 1 – 10 |
| 9 | புதன் | ஆதி. 16 : 1 – 16 | வெளி. 22 : 11 – 21 |
| 10 | வியாழன் | ஆதி. 17 : 1 – 13 | மத்தேயு 1 : 1 – 8 |
| 11 | வெள்ளி | ஆதி. 17 : 14 – 27 | மத்தேயு 1 : 9 – 17 |
| 12 | சனி | ஆதி. 18 : 1 – 15 | மத்தேயு 1 : 18 – 25 |
| 13 | ஞாயிறு | ஆதி. 18 : 16 – 33 | மத்தேயு 2 : 1 – 12 |
| 14 | திங்கள் | ஆதி. 19 : 1 – 11 | மத்தேயு 2 : 13 – 23 |
| 15 | செவ்வாய் | ஆதி. 19 : 12 – 21 | மத்தேயு 3 : 1 – 8 |
| 16 | புதன் | ஆதி. 19 : 22 – 38 | மத்தேயு 3 : 9 – 17 |
| 17 | வியாழன் | ஆதி. 20 : 1 – 9 | மத்தேயு 4 : 1 – 11 |
| 18 | வெள்ளி | ஆதி. 20 : 10 – 18 | மத்தேயு 4 : 12 – 17 |
| 19 | சனி | ஆதி. 21 : 1 – 8 | மத்தேயு 4 : 18 – 25 |
| 20 | ஞாயிறு | ஆதி. 21 : 9 – 21 | மத்தேயு 5 : 1 – 12 |
| 21 | திங்கள் | ஆதி. 21 : 22 – 34 | மத்தேயு 5 : 13 – 20 |
| 22 | செவ்வாய் | ஆதி. 22 : 1 – 12 | மத்தேயு 5 : 21 – 30 |
| 23 | புதன் | ஆதி. 22 : 13 – 24 | மத்தேயு 5 : 31 – 37 |
| 24 | வியாழன் | ஆதி. 23 : 1 – 10 | மத்தேயு 5 : 38 – 48 |
| 25 | வெள்ளி | ஆதி. 23 : 11 – 20 | மத்தேயு 6 : 1 – 15 |
| 26 | சனி | ஆதி. 24 : 1 – 13 | மத்தேயு 6 : 16 – 34 |
| 27 | ஞாயிறு | ஆதி. 24 : 14 – 26 | மத்தேயு 7 : 1 – 14 |
| 28 | திங்கள் | ஆதி. 24 : 27 – 39 | மத்தேயு 7 : 15 – 29 |
| 29 | செவ்வாய் | ஆதி. 24 : 40 – 52 | மத்தேயு 8 : 1 – 13 |
| 30 | **புதன்** | **ஆதி. 24 : 53 – 67** | மத்தேயு 8 : 14 – 34 |



# ஆராதனை பாடல்கள் - நவம்பர் 2022

| | |
|---|---|
| **04-11-22** | |
| பாமாலை - 22 | தூய தூய தூயா |
| பாமாலை - 322 | கர்த்தாவை நல்ல |
| கீர்த்தனை – 224 | தாசரே இத்தாரணியை |
| கீர்த்தனை – 77 | சீர் இயேசு நாதனுக்கு ஜெய |
| **11-11-22** | |
| பாமாலை - 24 | மா மாட்சி கர்த்தா |
| பாமாலை - 239 | இயேசு கற்பித்தார் |
| கீர்த்தனை – 377 | மகிழ்வோம் மகிழ்வோம் |
| கீர்த்தனை – 317 | அனுக்ரக வார்த்தையோடே |
| **18-11-22** | |
| பாமாலை - 2 | உம்மை துதிக்கிறோம் |
| பாமாலை - 238 | இயேசு எந்தன் |
| கீர்த்தனை – 208 | ஏற்றுக்கொண்டருளுமே |
| முடிவு கவி – 4 | தெய்வ ஆசீர்வாதத்தோடே |
| **25-11-22** | |
| பாமாலை - 386 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை - 243 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை – 383 | ஸ்தோத்திரம் இயேசுநாதா |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |

## திருமறை பாட ஒழுங்குகள் - நவம்பர் 2022

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-11-22 | ஒற்றுமை ஞாயிறு - திராட்சச் செடியும் கொடிகளும் | எசேக். 37:15 – 23 | 1 கொரி. 12:12–27 | யோவான் 15:1 - 8 | - |
| 11-11-22 | உலக ஞாயிறு பள்ளி தினம் | நியா. 13: 1 - 14 | எபேசியர் 6 : 1 – 4 | லூக்கா 1 : 57-66 | 119:9-16 |
| 18-11-22 | பெண் குழந்தை ஞாயிறு - பெண் குழந்தையின் மதிப்பை உறுதிப்படுத்துதல் | எண். 27 :1 -11 | அப். 21 :7 -14 | மாற்கு 5:35 - 43 | - |
| 25-11-22 | தோத்திரப் பண்டிகை ஆராதனை | உபாகமம் 26 : 1 - 11 | 2 கொரி.. 8:1 - 5 | லூக்கா 21 :1 - 4 | 65 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 01-11-22 | ஒருங்கிணைந்த ஜெபம் | | |
| 08-11-22 | சங்கீதம் | 72 | TCA – 8pm to 9pm |
| 15-11-22 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 22-11-22 | சங்கீதம் | 73 | Muroor – 8pm to 9pm |
| 29-11-22 | சங்கீதம் | 74 | Hamdan – 8pm to 9pm |

# BIRTHDAY - NOVEMBER 2022




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Manuel Sarah Foulkes Moore |
| 1 | Mr. | David Paulraj. S |
| 1 | Mr. | Vivin Alfred |
| 1 | Mrs. | Shekin Gunavathy Jhannah |
| 1 | Mrs. | Vithya Selvi |
| 4 | Mr. | Rajan Sagariya Nadar |
| 5 | Mr. | Prince Samuel |
| 5 | Ms | J. D. Hebinyakkisher |
| 6 | Mr. | Subin Raj |
| 9 | Mrs. | Jafnie Jebin |
| 9 | Mr. | Samuel Jackson Rajan |
| 9 | Mrs. | Dyana Stefy Sundar Lal |
| 10 | Mrs. | Merlin Jeba Kins |
| 12 | Ms. | Janessa. M |
| 13 | Mrs. | Shoba Denshi Bai |
| 14 | Mrs. | Neroline Jessy |
| 14 | Mr. | Arun Jeya Singh |
| 14 | Mr. | Jaya Chandraraja |
| 14 | Mrs. | Rachel John |
| 14 | Mrs. | Jenifa Jayasingh |
| 14 | Mrs. | P. Michael Rani Stalin |
| 17 | Mr. | Johanspher V |
| 17 | Baby. | Evelyn Loria. V |
| 17 | Ms. | Jerusha Raja |
| 18 | Mrs. | Vijila Rani |
| 20 | Mrs. | Deepa. C.P |
| 23 | Master. | Joshua Prince |
| 23 | Mr. | Immanuel Stanly |
| 23 | Miss | Dafina Dinesh |
| 24 | Mrs. Dr. | Ashibha Issac Eban |
| 26 | Ms. | Joanna Irene Johnson |
| 26 | Master. | Sam Sundar |
| 27 | Ms. | Angelin Monica Arun |
| 27 | Mrs. | Sasirekha Rajan |
| 29 | Baby | K. M. Alton Kim |

## WEDDING ANNIVERSARY - NOVEMBER 2022




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 6 | Mr. & Mrs. | Albert Raj T |
| 8 | Dr. & Mrs. | Benny Samuel. S |
| 15 | Mr. & Mrs. | Gnanaraj Murugesan |
| 21 | Mr. & Mrs. | Nithiya Kirubakaran. T |
| 26 | Mr. & Mrs. | Rajkumar G |
| 30 | Mr. & Mrs. | Vijay Ananth D |


## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| **1** | Chris Lilian Vasantha Prince | 438 |
| **2** | Ansel Regi | 439 |



Executive committee members 2022-2024



Madina Zayed Church day








**Church day and Choir day**






**Mr. Jebakumar Benjamin dedicated as choir master on 21/10/22**


Give Thanks to the Lord for He is Good